# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 003/மா/2019
ஆணை நாள்: 8.7.2019

திரு. M. ஆறுமுக நயினார்,
சென்னை – 4. – **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி. – **எதிர்மனுதாரர்**

பெருநகர சென்னை மாநகராட்சி, மைலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை எண்.2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். ஆறுமுக நயினார் என்பவரது 10.12.2018 நாளிட்ட முறையீட்டு மனு 10.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 003 /மா /2019 என எண்ணிடப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மைலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை எண்.2 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். ஆறுமுக நயினார் என்பவர் 10.12.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது கிரீன்வேய்ஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி என்ற நிறுவனத்திற்கு ஈரோடு மாநகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழ்களில் 18.03.2017 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.27,566/- இதுவரை வழங்கப்படாமல் உள்ளதாக முறையிட்டுள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 13.2.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி தனது முறையீட்டு மனு மீதான விளக்கத்தை அளிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 29.01.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் சார்பாக திரு. சிவராமன் என்பவர் 13.02.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தங்களது நிறுவனமான கிரீன்வேய்ஸ் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிசிட்டி என்ற நிறுவனத்தின் மூலம் ஈரோடு மாநகராட்சியின் எட்டு வேலைகள் சம்மந்தமாக 14.3.2017 நாளிட்ட மாநகராட்சி ஆணையரின் கடிதத்தின்படி அளித்த விளம்பரம், இயக்குனர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை மூலம் கடித எண். R.O. ரெ.1268/tender Advt/2017 நாள் 17.3.2017 ன்படி பிரசுரிக்கப்பட்டது என்றும், இதற்கான தொகை ரூ.27,566/- ஆகும் என்றும், ஒப்பந்த மதிப்பீடு தொகை ரூ.539 லட்சமாகும் என்றும், விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை இதுவரை தங்களது நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை என்றும், மேற்படி தொகையினை வழங்குமாறு மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு 10.01.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

எதிர்மனுதாரர் ஈரோடு மாநகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள எதிர்வாதுரையில் முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய ரூ.27,566/-ல் வரிகள் ரூ.1,204/- பிடித்தம் போக மீதித்தொகை ரூ.26,362/- ஐ காசோலை மூலம் முறையீட்டு மனுதாரர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், இவ்விபரங்களை ஏற்று புகார் மனுவினை முடித்து வைக்க கோரியுள்ளார்.

மேலும், முறையீட்டு மனுதாரர் தனது 25.2.2019 நாளிட்ட கடிதத்தில் தங்களது நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் (T.D.S) பிடித்தம் செய்யப்பட்டு பட்டியல் தொகை ரூ.26,362/- ஐ காசோலை மூலம் வழங்கப்பட்டு விட்டது என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின்படி விளம்பரம் செய்ததற்கான பட்டியல் தொகை ஈரோடு மாநகராட்சி ஆணையரால் வழங்கப்பட்டுவிட்டதால் இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//——

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ).

பெறுநர்

1. திரு. M. ஆறுமுக நயினார்,
Proprietor Greenways Advertising & Publicity,
நெ. 2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர், சென்னை – 4.

2. ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்